RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL

சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s2015

OPEN ACCESS

# புறநானூற்றில் மனித உறவுகள்

ப. கணேஷ்வடிவேல் [அ, *]

[அ] தமிழாய்வுத்துறை, ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி(தன்னாட்சி), திருச்சி-620005, தமிழ்நாடு, இந்தியா.

# Human Relations in the Puranaanooru

**P. Ganeshvadivel [a, *]**

[a] Department of Tamil, Srimad Andavan Arts and Science College (Autonomous), Trichy-620005, Tamil Nadu, India

* Corresponding Author: gvrukmani@gmail.com

Received: 24-06-2022
Revised: 02-10-2022
Accepted: 11-10-2022
Published: 05-11-2022

Check for updates

**ABSTRACT**

In the modern age, the relationship between human beings today is in a state of decline. Human relationships are not formed by love, character, or affection. They are formed on the basis of material and attachments, and on the basis of needs. Those who are able to get along with themselves will eventually be exposed to their true qualities and characteristics, just as a snake peels off its skin and leaves it, once the needs of their consciousness are fulfilled. Husband, wife, children, siblings, relatives, and blood relations are all relationships that have arisen to satisfy some kind of need. The friendship and social relationships formed when they leave the family and socialize in the community are chosen as a relationship that can be enjoyed by one's own self-interest. Thus, today's relationships are bound up only for money, position, and selfishness. However, in the Puranaanooru of Sangam literature, this study is carried forward to find out how the husband-wife relationship, the child relationship, the father-child relationship, the king-poet relationship, the king and people relationship, the poet-poet relationship, the places where the human relationship is established, the friendship mixed with the mind, etc., were presented in this study and carried forward to understand how they had the elements, commitments, and sacrifices of various human relationships.

**Keywords:** Puranaanooru, Human Relations, Love, Character, Affection

## முன்னுரை

சமுதாயத்தில் சமூகக் கட்டுப்பாட்டை ஏற்படுத்தி ஒழுங்கையும், நிலைத் தன்மையையும் நிலைபெறச் செய்வதே உறவுமுறைகளாகும். இதில் உறவுகளும், உறவு முறைகளும் ஒன்றோடொன்று பிரிக்க முடியாதவாறு பின்னிப் பிணைந்துள்ளன. "பழங்கால எகிப்திய அரச குடும்பத்தினர்கள் அண்ணன் - தங்கை, தந்தை மகள் திருமண உறவுகளை அனுமதித்துள்ளதாக வரலாற்றில் காணக்கிடக்கின்றது".

சமூகத்தில் காணப்படும் கீழ்நிலையான எண்ணங்களையும் செயல்களையும் சீர்படுத்தி ஒழுங்கையும், கட்டுப்பாட்டையும் உருவாக்குவதற்காக உறவுகள் உருப்பெற ஆரம்பித்தன. தொடக்கக் காலத்தில் உறவுகள் கட்டுப்பாடற்று முறையின்றிக் காணப்பட்டன.

உறவுகள் ஒழுக்கமும், கட்டுப்பாடுமின்றிப் பரவிக் கிடந்துள்ளன. சமூக அமைப்பாலும், காலப்போக்கில் ஏற்படும் மாற்றங்களாலும் அவற்றை இரத்த உறவு (Consanquinal relation) என்றும், பிற குழுக்களிடம் ஏற்படக்கூடிய உறவை மணஉறவு (Affinial relation) என்றும் பாகுபடுத்திப் புதிய பரிணாமத்தை ஏற்படுத்தினர்.

திருவள்ளுவர் மனித உறவானது குடும்பத்திலிருந்து தொடங்குவதை,

“மங்கலம் என்ப மனைமாட்சி மற்று அதன்

நன்கலம் நன்மக்கட் பேறு”

என்று குறிப்பிடுகிறார் (Gopalakrishnamachariyar, 1965).

மக்களின் மனதை ஆளக் கற்றுக் கொண்டவனே மனித உறவை வளர்க்க முடியும். சொல்லாலும், செயலாலும், நன்னடத்தையாலும், நம்பிக்கையாலும் மனிதர்களின் மனத்தில் இடம் பிடித்தவனே உறவை உயிர்ப்பிக்க முடியும்.

அன்பாலும், உதவியாலும், பாசத்தாலும், நேசத்தாலும், இன்பத்திலும், துன்பத்திலும் துணை நிற்பது, நம்பிக்கையூட்டுவது, ஆறுதல் கூறுவது, நல்லொழுக்கத்தையும் நல்வழியையும் கற்பிப்பது, காண்பிப்பது, மற்றவர்களுக்குத் தீங்கு செய்யாதிருத்தல், மற்றவர்கள் செய்யும் தவறைச் சுட்டிக் காட்டித் திருத்துவது, தன் தவறை ஒத்துக் கொள்ளுதல் ஆகியவை மனித உறவை வளர்க்கும் காரணிகளாகும்.

## குடும்ப உறவு

ஆணும் பெண்ணும், அதற்கு மேற்பட்டவரோ இணைந்து வாழ்க்கை அமைப்பே குடும்பம் என்று அழைக்கப்படுகின்றது. திருமணமென்னும் உறவில் கணவனும், மனைவியும் தனியாகக் குடித்தனம் நடத்தச் செல்கின்றனர். இக் ‘குடித்தனம்’ என்னும் சொல் காலப்போக்கில் மாறி ‘குடுத்தனம்’ என்றும், ‘குடும்பம்’ என்றும் மருவியதை இன்றும் நாம் கண்கூடாகக் காணமுடிகின்றது.

சங்க இலக்கியத்திலோ, தொல்காப்பியத்திலோ குடும்பம் என்ற சொல் இடம் பெறவில்லை. மனை, இல், இல்லம், குடி ஆகிய சொற்கள் ‘குடும்பம்’ என்ற பொருள் தருவனவாக அமைகின்றன.

“தமிழிலக்கியத்தில் முதன் முதலில் ‘குடும்பம்’ என்ற சொல்லை ஓரிடத்தில் மட்டும் திருவள்ளுவர் கையாளுகின்றார்” ஆனால் மற்ற இடங்களில் குடி என்ற சொல்லே மிகுதியாகக் கையாளப்படுகிறது (Gopalakrishnamachariyar, 1965).

“குடும்பம் என்பது” திருமணத்தின் மூலம் பிணைக்கப்பட்டு, ஒரு குடியிருப்பில் கணவன், மனைவி, தாய், தந்தை, மகன், மகள், தம்பி, தங்கை போன்ற உறவு முறைகளுடன் பொதுப்பண்பைப் படைத்தும், பாதுகாத்தும் வளர்ச்சியுறுவதே குடும்பம்” (Arumugam 1994) என்ற பிரித்தானியக் கலைக் களஞ்சியம் விளக்கந்தருகிறது.

சமூக வாழ்க்கையின் மையமே குடும்பமாகும். உடலையும் உள்ளத்தையும் சீர்படுத்தும் இடமாகக் குடும்பம் அமைகிறது. மனிதனின் அடிப்படை உணர்வுகளாகிய அன்பு, காதல், நட்பு, தோழமை, பாதுகாப்பு போன்றவற்றை வளர்க்கக் குடும்பம் காரணமாக அமைகிறது.

## கணவன் - மனைவி உறவு

கணவன் மனைவி இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக் கொடுத்து ஒளிவு மறைவின்றி நேர்மையுடனும், பரஸ்பர நம்பிக்கையுடனும் வாழும் வாழ்வு மாசற்ற நல்வாழ்வு ஆகும். இதைத்தான் திருவள்ளுவர்,

“மனத்துக்கண் மாசில னாத லனைத்தற

னாகுல நீர பிற”

என்ற குறள் மூலம் விளக்குகிறார் (Gopalakrishnamachariyar, 1965).

ஒல்லையூர் தந்த பூதப் பாண்டிய மன்னன் கணவன் மனைவி இடையேயுள்ள உறவை விளக்குகையில்,

“பேரம ருண்க ணிவனினும் பிரிக”

என்றுரைக்கிறார். அதாவது எனக்குச் சிறந்தவளான பெரியவாயோடும், முகத்தோடும் பொருந்தின. மையுண்ட கண்ணினையுடைய இவளை விட்டு நீங்க மாட்டேன் என்று கூறுவதால், சங்க காலத்தில் கணவன் மனைவி உறவு எவ்வளவு நெருக்கமானதாக இருந்துள்ளது என்பதை அறியலாம் (Duraisamy pillai, 1973).

பட்டினப்பாலையும் இதே கருத்தை,

“முட்டாச் சிறப்பின் பட்டினம் பெறினும்

வாரிரும் கூந்தல் வயங்கிழை ஒழிய

வாரேன் வாழிய நெஞ்சே” என்கிறது (Duraisamy pillai, 1973).

பிள்ளைப்பேறு காலத்தில் கணவன் மனைவியின் அருகில் இருக்க வேண்டும் என்பதை,

“நிழலினும் போகாநின் வெய்யோள் பயந்த

புகழ்சால் புதல்வன் பிறந்த பின் வாவென”

கோப்பெருஞ்சோழன் கூறியாதகப் பொத்தியார் பாடுகிறார். உன்னுடைய நிழலை ஒரு பொழுதும் நீங்காது, நீ விருப்பம் கொள்ளும் மனைவியானவள், புகழான பிள்ளையைப் பெற்ற பின் வாவெனப் பொத்தியாரைக் கோப்பெருஞ்சோழன் கூறுவதாக அமைந்துள்ளது (Duraisamy pillai, 1973).

## தம்மை மறக்கும் மழலை உறவு

“குறு குறு நடந்து சிறுகை நீட்டி

இட்டுந் தொட்டுங் கவ்வியுந் துழந்தும்

நெய்யுடை யடிசின் மெய்பட விதிர்த்தும்

மயக்குறு மக்களை யில்லோர்க்குப்

பயக்குறை யில்லை தாம்வாழு நாளே”

என்று பாண்டியன் அறிவுடை நம்பி பாடுகிறார் (Duraisamy pillai, 1973). அதாவது செல்வம் மிகுந்திருந்தாலும், பலருடன் கூடிப் பலவகை உணவுகளை உண்ணும் வாய்ப்புக் கிடைத்தாலும் அவ்வின்பத்தை விடக் குறுகுறுவென நடந்து சென்று, சிறிய கையை நீட்டி, உன் கலத்தில் கிடந்ததைக் தரையிலிட்டும், பிசைந்து தோண்டியும், வாயால் கவ்வியும், கையால் உழப்பியும், நெய்யால் பிசைந்த சோற்றை உடம்பெல்லாம் படுமாறு சிதறி உண்ணும் இயல்புடைய புதல்வரால் கிட்டும் இன்பத்தை விடச் சிறந்தது எதுவும் இல்லை. புதல்வரைப் பெறாதவர்க்குத் தாம் உயிர் வாழும் நாளில் அவர்கள் சேர்த்து வைக்கும் பொருள் வேறில்லை என்கிறார் பாண்டியன் அறிவுடைநம்பி.

## தாய் - மகன் உறவு

தாய்க்கும் மகனுக்கும் உள்ள உறவானது புலி தங்கி விட்டுச் சென்ற குகைக்கும் புலிக்கும் இடையே உள்ள உறவு போன்றது என்பதை,

“புலி சேர்ந்து போகிய கல்லளை போல

ஈன்ற வயிறோ விதுவே”

என்னும் அடிகள் உணர்த்துகின்றது (Duraisamy pillai, 1973).

"போரில் தன்மேல் பாய வந்த யானையைக் கொன்று தன் மகன் இறந்தான் என்ற செய்தி கேட்ட தாய் வருத்தம் கொள்ளாது. அவனைப் பெற்றெடுத்த பொழுது உண்டான மகிழ்ச்சியை விடப் பெரிதாக மகிழ்ச்சியுற்றாள் (Duraisamy pillai, 1973)."

எனத் தன் மகனின் வீரத்தையும், வீரமிக்க மகன் மீது வைத்துள்ள பாசத்தினுறவையும் பூங்கண் உத்திரையார் எடுத்தியம்புகிறார். இதனையே திருவள்ளுவர் புதல்வரைப் பெறுதல் என்னும் அதிகாரத்தில்,

"ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச்

சான்றோ னெனக் கேட்ட தாய்" என்கிறார் (Gopalakrishnamachariyar, 1965).

## தம்பியுறவு

"தன்னுடைய தம்பியைக் கொன்றவனைப் பழிவாங்குவேன் எனக் கூறும் தமையன், அவனையும் அவன் தம்பியையும் ஒரு சேர அழித்தொழிப்பேன்" என்று வஞ்சினம் கூறுவதிலிருந்து அவன் தன் தம்பியின் மீது வைத்துள்ள அன்பை உணர முடிகிறது (Duraisamy pillai, 1973).

## சமுக உறவு

சமுகம் என்பது மிகப் பெரிய கடல். அக்கடலில் தனியொரு மனிதனாக நீந்திக் கரை சேருவதென்பது கடினம். அக்கரை சேருவதற்குத் துடுப்புகளின் துணை மிக அவசியம். அத்தகைய துடுப்புகளாக அமைவனவே சமூக உறவுகளாகும்.

"ஒவ்வொரு மனிதனும் ஏனைய மனிதர்களுடன் கொண்டிருக்கும் சிக்கலான சமூக உறவு முறைத் தொடர்புகளைத்தான் சமூகம்" என்று வில்லியம் லில்லி கூறுகிறார் (Arumugam, 1994).

பல குடும்பங்கள் ஒன்று சேரும் பொழுதுதான் சமூகம் உண்டாகிறது. குடும்ப உறவே, சமூக உறவுக்கு வித்திடுகிறது. சமூகத்தின் செயல்களால் குடும்பம் பாதிக்கப்படுகிறது. குடும்பத்தின் செயல்களால் சமூகம் பாதிக்கப்படுகிறது. ஆகவே சமூகமும், குடும்பமும் ஒன்றையொன்று பிரிக்க முடியாமல் பின்னிப் பிணைந்து கிடக்கின்றதை நாம் கண்கூடாகக் காணமுடிகின்றது.

தொல்காப்பியர் தொல்காப்பியத்தில் சமூகத்திலுள்ள அங்கத்தினர்களை,

"ஏவல் மரபின் ஏனோரும் உரியர்

ஆகிய நிலைமை யவரும் அன்னர்"

என்ற நூற்பாவில் நால்வகை வருணத்தார்களைப் பற்றியும், அவர்களுக்கு ஏவல் செய்பவர்களைப் பற்றியும், குறுநில மன்னர்களைப் பற்றியும் எடுத்துரைக்கின்றார் (Tholkappiyar, 1983).

பிறப்பு, திருமணம், இறப்பு இவற்றின் மூலம் சமூகத்தில் தோழமை உணர்வு உருவாகிறது. இளைஞர், முதியவர்களுக்கிடையில் கண்ணியத்தையும், நட்பையும், தொடர்பையும் ஏற்படுத்துகிறது. உடலையும். உள்ளத்தையும் சீர்படுத்தும் இடமாக சமூகம் அமைகின்றது.

மனித அடிப்படை உணர்வுகளாகிய அன்பு, காதல், நட்பு, தோழமை, பாதுகாப்பு போன்றவற்றை வளர்க்கச் சமூக உறவு காரணமாக அமைகின்றது.

"சமூகம் என்பது உருவுள்ளதாய்க் கருதும் போது மக்கள் குழுவையும் உருவற்றதாகக் கருதும்போது மக்கள் வாழ்வையும் குறிக்கும்" என்று என்னும் அறிஞர் கூறுகிறார் (Arumugam, 1994).

மக்களுடைய அகச் செயல்களின் நிலைக் கண்ணாடியே சமூகமாகும். ஒவ்வொரு மனிதனும் சமூகத்தைச் சார்ந்தே வாழ்கிறான். மனிதனுக்கு மனிதன் பரஸ்பர நம்பிக்கையின் அடிப்படையிலும், நட்பின் அடிப்படையிலுமே சமூகம் நிலை பெறுகின்றது.

சாதி, மத, மொழி, இன வேறுபாடுகளைக் கடந்து அனைவரும் ஒற்றுமையுடனும், ஒருமைப்பாட்டுடனும், நட்புடனும் வாழ இச்சமூகம் வழிவகை செய்கின்றது.

## புலவரிடத்தில் மன்னர் கொண்டுள்ள உறவு

அக்கால மன்னர்கள் புலவரிடம் மிகுந்த மதிப்பும், மரியாதையும், அன்பும் கொண்டிருந்ததைப் புறப் பாடல்கள் வெளிப்படுத்துகின்றன.

புலவர்களிடம் மன்னர்கள் கொண்ட அன்பின் மிகுதியால், அவர்கள் தம் உயிர் தழைத்திருப்பதைக் காட்டிலும், புலவர்கள் நீண்ட காலம் வாழ ஆவண செய்தனர். அவர்களும் நன்றி மறவா உயர்தகைமையால் தமக்குச் சிறப்பித்த மன்னர்களை இறைவனுடன் ஒப்ப வைத்துப் போற்றினர் என்பதை ஔவையார்,

"நீல மணிமிடற் றொருவன் போல

மன்னுக பெரும நீயே

பெருமலை விடரகத் தருமிசைக் கொண்ட

சிறியிலை நெல்லித் தீங்கனி குறியா

தாத னின்னாகத் தடக்கிச்

சாத னீங்க வெமக்கீத் தனையே"

என்று பாடியுள்ளார். பெரிய மலையிடத்துள்ள பிளவின்கண், மிகவும் உயர்ந்த உச்சியில் விளைந்த சிறிய இலையினையுடைய நெல்லியின் இனிய பழமானது, கிடைப்பதற்கு அரிதென்று கருதாமல், அதனால் கிடைக்கும் நன்மையினை எனக்குக் கூறாது. உனக்குள்ளே அடக்கி வைத்துக் கொண்டு, என் மரணம் நீங்க எமக்கு அளித்தாய். ஆதலால் நீ நீலமணி போல் விளங்கும் கரிய திருமிடற்றில் நஞ்சுண்டும் சாவாது நிலை பெற்றிருந்தார் போல நீயும் சாவாதிருத்தல் வேண்டும் என்று அதியமான் நெடுமான் அஞ்சியை ஔவையார் வாயார வாழ்த்துகிறார் (Duraisamy pillai, 1973).

## மக்களிடத்தில் மன்னர் கொண்டுள்ள உறவு

மக்களிடம் மன்னர்கள் மிகுந்த அன்பு கொண்டிருந்தனர். அவர்களை இனிது பாதுகாதது இனிய அன்பளிப்புகள் பலவும் அளித்து வந்துள்ளனர்.

"திலங்குவளை மகளிர் தெற்றி யாடும்

விளங்குசீர் விளங்கில் விழுமங் கொன்ற

களங்கொள் யானைக் கடுமான் பொறைய"

விளங்கில் என்னும் ஊரில் வாழும் மகளிருக்கும், பிறருக்கும் பகைவர்கள் துன்பம் தரும் பொழுது அதைத் தடுப்பதற்காக யானைப் படைகளையும், குதிரைப் படைகளையும் கொண்டுபோர் செய்து அம்மக்களைக் காப்பாற்றினான் மாந்தரஞ் சேரலிரும்பொறை என்று பொருந்திலினங்கீரனார் பாடுகிறார். மக்கள் மீது மன்னர் வைத்திருந்த பாச உறவை இப்பாடல் உணர்த்துகின்றது (Duraisamy pillai, 1973).

## மன்னரிடத்தில் புலவர் கொண்டுள்ள உறவு

மன்னரிடத்தில் புலவர்கள் மிகுந்த மதிப்பும், மரியாதையும், அன்பும் கொண்டிருந்தனர். தன்னை விரும்பும் மன்னனை விட்டு வேறு மன்னரிடம் செல்லாது அவனே தஞ்சம் என வாழ்ந்துள்ளனர். "வேள் ஆய் அன்டிரனையன்றிப் பிறரை நினைத்த உள்ளமும், புகழ்ந்த நாவும், பிறர் புகழ் கேட்ட செவியும்

தண்டித்ததற்கும்ட அழிவிற்கும் உரியவை எனச் சபிக்கிறார். வடதிசை இமயமும், தென்திசை ஆய்குடியும் இல்லையென்றால் இந்த உலகம் தலைகீழாக மாறிவிடும்" என்று பாடும் ஏணிச்சேரி முடமோசியாரின் பாடலால் புலவரிடத்து மன்னன் கொண்டிருந்த அன்புறவு புலனாகிறது (Duraisamy pillai, 1973).

## மன்னர்க்கும் மன்னர்க்குமிடையேயுள்ள உறவு

மன்னர்களுக்கு இடையே நடைபெற இருந்த போரைப் புலவர்கள் தடுத்து நிறுத்தி அவர்களிடையே சமாதானத்தை நிலவச் செய்துள்ளனர். சோழன் நலங்கிள்ளிக்கும், நெடுங்கிள்ளிக்குமிடையே போர் நிகழ இருந்தது.

"நின்ன கண்ணியு மார்மிடைந் தன்றே, நின்னொடு

பொருவோன் கண்ணியு மார்மிடைந் தன்றே"

"அவ்விருவருமே ஒரே குடியைச் சேர்ந்தவர்கள். இருவரும் ஆத்தி மாலையைச் சூடியவர்கள், அதில் ஒருவர் தோற்றாலும், தோற்பது அவர் குடியேயாகும் என்று அறிவுறுத்திப் போரைத் தவிர்க்கிறார் புலவர் கோவூர்கிழார்" (Duraisamy pillai, 1973).

## நட்புறவு

நட்பு என்பது ஒரு ஆவணம். குறைந்தது இருவருக்கிடையே ஏற்படும் எழுதப்படா ஆவணமாகும். ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள நம்பிக்கையின் அடிப்படையிலும், பாசத்தின் அடிப்படையிலும் இது நிர்ணயிக்கப்படுகின்றது.

நம்பிக்கை, மரியாதை, தூய்மை, பாதுகாப்பு, உறுதுணை, உதவுதல், நீங்காதிருத்தல், தோழமை, மாறாத நிலை, புரிந்து கொள்ளுதல், ஏற்றுக் கொள்ளுதல் இவற்றால் கட்டிக் காக்கப்படும் கட்டிடமே நட்பென்னும் மாளிகை எனலாம்.

'தான் 'என்ற நிலை நெகிழ்ந்து 'நாம்' என்ற உணர்வு கனிகின்ற நிலை தான் நட்பாகும். அன்பின் முதிர்ச்சியே நட்பாகும். திருவள்ளுவர் நட்பைப் பற்றித் திருக்குறளில் ஏழு அதிகாரங்கள் படைத்துள்ளார். அவை நட்பு, தீ நட்பு, கூடா நட்பு, பகைமை, நட்பாராய்தல், சிற்றினம், சேராமை, பெரியாரைத் துணைக் கோடல் எனப் பல அதிகாரங்களில் விளக்கியுள்ளார்.

உண்மையான நட்பு எதுவென்று கூறும் பொழுது,

"குடம்பை தனித்தொழியப் புட்பறந் தற்றே

யுடம்போ டுயிரிடை நட்பு"

உடம்புக்கும் உயிருக்கும் இடையே உள்ள உறவு தான் உண்மையான நட்பாகும். உடம்பில் ஊசி குத்தினால் உயிர் துடிக்கிறது. உயிர் பிரிந்தால் உடல் பயனும் இயக்கமற்றதாகி விடுகிறது. அதுபோல் தான் உயர்ந்த நட்பு இருக்க வேண்டுமென்று வள்ளுவர் வலியுறுத்துகிறார் (Gopalakrishnamachariyar, 1965).

"நட்பானது இன்ப துன்பங்களைப் பகிர்ந்து கொள்ளும் தன்மையது. துன்ப துயரங்களில் உடனிருந்து பங்கேற்பவனே உண்மையான நண்பனாவான் என்கிறார் வள்ளுவர்" (Gopalakrishnamachariyar, 1965) "நட்பிடை வஞ்சித்தவன் இம்மையில் குட்ட நோயிலும் மறுமையில் நரகத்திலும் அழுந்துவான்" என்று திருத்தக்கதேவர் கூறியுள்ளார் (Somasundhranar, 1974).

"ஒருவரோடு ஒருவர் நட்பாவதற்கும் புணர்ச்சியும் பழகுதலுமாகிய காரணங்கள் வேண்டுவதில்லை. இருவருக்கும் ஒத்த உணர்ச்சியே நட்பு உரிமையைக் கொடுக்கும் என்கிறார் திருவள்ளுவர்." "முகமும் அகமும் மலர விரும்பி நட்புக் கொள்வதே உண்மையான நட்பாகும்" என்று எடுத்துரைக்கின்றார் (Gopalakrishnamachariyar, 1965). "நெடுநாளைய நண்பனே சிறந்த முகம் பார்க்கும்

கண்ணாடி" என்பது ஆங்கில முதுமொழியாகும். "கிரேக்க மேதை அரிஸ்டாட்டில் நண்பனை இரு உடல்களில் வாழும் ஓர் உயிர்" என்கிறார் (Somasundhranar, 1974).

## ஒற்றுமையே நட்புறவின் பலம்

"நண்பர்கள் ஒற்றுமையுடன் இருந்தால் எவ்வளவு பெரிய செயலாக இருந்தாலும், அதைச் செய்து முடித்து விட முடியும் என்பதைக் காரிக்கண்ணனார் தமது பாடலில் சுட்டியுள்ளார். "உம்முடைய புகழ் நெடுங்காலம் விளங்க வேண்டுமானால், நீங்கள் இருவரும் நீங்காது கூடி நின்று ஒருவருக்கு ஒருவர் உதவுங்கள் அவ்வாறு செய்வீர்களானால் இக்கடல் சூழ்ந்த உலகம் உங்கள் கைக்குள் வருவரு பொய்யாகாது. இன்று போல் என்றும் நட்புடன் விளங்க வேண்டும் என்று நட்பின் சிறப்பைப் புலப்படுத்துகிறார்" (Duraisamy pillai, 1973). இதே கருத்து குறுந்தொகையில், "இன்றையன்ன நட்பு", "அன்றை யன்ன நட்பினன்" 12 என்ற பாடல் அடிகளில் சுட்டப்பட்டுள்ளன (samynathaiyar, 2000).

## நட்புறவு

பல நாட்கள் பழகிய நண்பாகள் பிரிந்தால் அந்தப் பிரிவு எவ்வளவு கொடுமையான செயல் என்பதைப் புறநானூறு

"காணாத குழிந்த வைகல் காணா

வழிநாட் கிரங்கு மென் னெஞ்சமவன்"

என்ற பாடலில் விளக்குகிறது. நண்பனைக் காணாது கழிந்த நாட்கள், எனக்கு நாட்களாகப் போகவில்லை. அவனொடு தொடர்ந்த நட்பானது. இன்று போல் என்றும் தடைப்படாமல் செல்ல வேண்டமென்று பின்வரும் நாளை இரங்கி நிற்கின்றேன் என்று நன்னாகனார் ஒய்மா நாட்டு நல்லியக் கோடனிடம் கொண்டுள்ள நட்புறவைச் சுட்டிக் காட்டுகிறார் (Duraisamy pillai, 1973).

நண்பர்களுடைய பண்புகளின் அடிப்படையில் நட்பானது பிரிக்கப்படுகிறது. இதனை,

"கடையாயார் நட்பில் கமுகனையர் ஏனை

இடையாயார் தெங்கின் அனையர் - தலையாயார்

எண்ணரும் பெsssண்ணைபோன் றிட்டஞான் றிட்டதே

தொன்மை உடையார் தொடர்பு"

என்ற பாடலில் கடைநிலையில் இருப்பவர்களின் நட்பானது பாக்கு மரம் போன்றது. கவனித்து வளர்த்தால் தான் பாக்குமரம் பயன்தரும். அதுபோல் இவர்களும் பயன் கருதியே பழகுவர். இடைப்பட்டவர்கள் தென்னைமரம் போன்றவர்கள். அவ்வப்பொழுது தண்ணீர் சிறிது சிறிது விட்டு வளர்த்தால் போதும், தென்னைப் பயன் தரும். அதுபோல் இவர்களும் எப்போதாவது நம் நட்பை நாடிப் பயன் பெறுவர். ஆனால் மேன்மக்களின் நட்பானது, விதை இடைப்பட்ட நாளிலிருந்து வேறு எந்த உதவியும் எதிர்பாரது தானே முளைத்து வளர்ந்து பயன்தரும் பனை மரத்திற்கு ஒப்பானவர்கள் மேன்மக்கள் என்று நாலடியார் நட்பின் படி நிலையை விளக்குகிறார் (Manikam, 1993).

## உண்மையே நட்புறவின் உயிர்

நண்பர்களிடையே என்றும் உண்மையே பேச வேண்டும் என்பதை,

"ஒல்லுவ தொல்லு மென்றலும் யாவர்க்கும்

ஒல்லா தில்லென மறுத்தலு மிரண்டும்

ஆள்வினை மருங்கிற் கேண்மைப் பாலே"

என்கிறார். தம்மால் கொடுக்கக் கூடிய பொருளை முடியும் என்று சொல்லிக் கொடுப்பதும், தம்மால் கொடுக்கமுடியாத பொருளை முடியாது என்று சொல்லி மறுப்பதும் என இவ்விரண்டையும் தளராத ஆண்மையுடன் வெளிப்படையாகக் கூறுவதே நட்பிற்குச் சிறந்தது என்று ஆவூர் மூலங்கிழார் உரைக்கின்றார். ஆகையால் நேர்மை, வாய்மை, உண்மையால் தான் நட்புறவு சிறப்புற்று விளங்குமென உணரலாம். கேண்மை என்னும் சொல் நட்பைக் குறிக்கின்றது (Duraisamy pillai, 1973).

நட்பானது எந்த ஒரு சூழ்நிலையிலும் நன்றி மறவா தன்மையுடன் இருக்கவேண்டும் என்பதை,

"யானை அனையவர் நண்பொரீஇ நாயனையார்

கேண்மை தழீஇக் கொளல்வேண்டும் - யானை

அறிந்தறிந்தும் பாகனையே கொல்லும் எறிந்தவேல்

மெய்யதா வால்குழைக்கும் நாய்"

என்ற பாடலில் யானையைப் போன்றவர்கள் நட்பை விட்டுவிட்டு நாய் போன்ற குணங்களை உடையவர்களிடம் கொள்ள வேண்டும் என்கிறார். ஏனெனில் யானையானது மதம் பிடித்த நிலையில் தன் பாகனையே கொன்றுவிடும். ஆனால் நாயோ தன்னை வளர்த்துச் சோறிட்டவர், தன் மீது வேலெடுத்து வீசினாலும், அதற்காக வருத்தமுற்று அவரைச் சென்று கடிக்காது வாலாட்டிக் கொண்டு நன்றி பாராட்டும் என்கிறார் (Manikam, 1993).

நாலடியார் பாடலுக்கு வலுசேர்க்கும் விதமாக பொய்யில் புலவர் அவர்கள்

"அழிவினவைநீக்கி யாறுய்த்த தழிவின் கண்

அல்ல லுழப்பதா நட்பு" என்கிறார் (Gopalakrishnamachariyar, 1965).

## தன்னாட்டு மன்னனையும் மறந்த நட்புறவு

தன் நாட்டு அரசனை நினையாது. அடுத்த நாட்டு அரசனையே நினைத்து வாழ்ந்து கொண்டிருந்ததைப் புறநானூறு புலப்படுத்துகிறது. "உம்முடைய அரசன் யார் என்று வினவினால், எம்முடைய அரசன் உறையூரில் வாழும் கோப்பெருஞ்சோழன் ஆவான். அவன் பொத்தியாரென்னும் புலவரோடு பகையில்லா நட்பினைக் கொண்டிருந்தான்". என்று பிசிராந்தையார் பாடுவதால் கோப்பெருஞ் சோழனிடம் அவர் கொண்டிருந்த நட்புறவு புலனாகின்றது (Duraisamy pillai, 1973).

எந்நாளும் தன் நாட்டு அரசனை நினையாது. பிறநாட்டு அரசனையே நினைத்துக் கொண்டு இருக்கும் புலவனின் உறவும், தன் அருகில் இல்லாது, எங்கோ இருக்கும் புலவரோடு மன்னர் கொண்டுள்ள நட்புறவு எஞ்ஞான்றும் ஞாலத்தார் பின்பற்றத்தக்க நல்லுறவுகளேயாகும்

## நட்பின் உறுதி

சோழநாட்டில் உறையூரை ஆண்ட கோப்பெருஞ்சோழனும், பாண்டி நாட்டுப் பிசிராந்தையாரும் ஒருவரையொருவர் காணாது நட்புக் கொண்டனர். கோப்பெருஞ்சோழன் வாழ்க்கையில் வெறுப்புற்று வடக்கிருக்கத் துணிந்த பொழுது, தன் உயிரினும் மேலான நண்பன், பாண்டி நாட்டிலுள்ள பிசிர் என்னும் ஊரைச் சேர்ந்தவன். அவன் என்னுயிரைப் பாதுகாப்பவன். அவன் நான் செல்வமுற்றிருந்தபோது வராமற்போயினும், யான் துன்புறும் இக்காலத்து உறுதியாக வருவான் என்று கூறுகின்றான்.

"பிசிரோ னென்படுவனே யிரோம் புலனே

செல்வக் காலை நிற்பினும்

அல்லற் காலை நில்லலன் மன்னே"

என்றும், ஆதலால் அவர் என்னுடன் வடக்கிருக்க அவருக்கு ஓர் இடம் ஒதுக்கி வைப்பீராக என்று கூறுகின்றான் (Duraisamy pillai, 1973).

"உற்ற நோய்நீக்கி, உறாஅமை முன்காக்கும்

பெற்றியார்ப் பேணிக் கொளல்"

என்கிறது திருக்குறள். வந்துள்ள துன்பத்தை நீக்கி, இனித் துன்பம் வராதபடி முன்னரே காக்க வல்லவருடன் நட்புக் கொள்ள வேண்டும் என்பதே வள்ளுவர் கருத்து (Gopalakrishnamachariyar, 1965).

## உணர்வில் கலந்த நட்புறவு

ஆண்டுகள் பல பழகியிருந்தும் நட்புடன் இருப்பது மிகவும் அரிது. ஆனால் காணாமலே அவர் என் மீது பிணைந்த நட்புக் கொண்டுள்ளார். தன் புகழ் அழிந்தாலும் பொய் கூறமாட்டான். தன் பெயரைப் பிறருக்குக் கூறாது என் பெயரைத் தன் பெயராகக் கூறும் அன்பினால் உரிமையுடையவள் ஆவான் என்று கோப்பெருஞ்சோழன் பிசிராந்தையாரின் நட்பின் சிறப்பை எடுத்துக் கூறுகிறார்.

"தன் பெயர் கிளக்குங் காலை யென்பெயர்

பேதைச் சோழ னென்னுஞ் சிறந்த"

என்று மன்னன் கூறுவதால் கோப்பெருஞ்சோழன், பிசிராந்தையார் நட்பானது தெய்வீகம் கலந்த நட்புறவாக நம் கண் முன்னே தோன்றுகிறது. இவ்விருவரும் நட்புக்கே இலக்கணம் வகுத்து விட்டார்கள். பொதுவாகக் காதலன் காதலி பெயரையும், காதலி காதலன் பெயரையும், தம் பெயராகக் கூறுவார்கள். ஆனால் இங்கு நட்பே காதலாக மாறிவிட்டது (Gopalakrishnamachariyar, 1965).

மனத்தால் தான் வேறு சோழன் வேறு என்று எண்ணாது. உயிரிலும் உணர்விலும் ஒன்றிணைந்து கலந்து விட்ட, ஈருடல் ஓருயிர் என ஐக்கியமாகி விட்ட ஜீவனுள்ள ஆன்மாவே உண்மையான நட்பாகும்.

## குடும்பத்தை விட நட்பே உயர்வு

"கோப்பெருஞ்சோழனுடைய உயிர்த் தோழர் பொத்தியார். சோழன் வடக்கிருக்கச் சென்ற பொழுது தானும் வடக்கிருந்து உடனிறக்க விரும்பினார். அப்பொழுது சோழன், தமக்குப் பிள்ளை பிறந்த பிறகு வருமாறு சொல்லித் தம்மை அனுப்பிவிட்டதாகவும் அதற்குத்தாம் மிகவும் வருந்துவதாகவும் தாம் பின்பு வடக்கிருக்கத் தமக்குக் குறித்த இடம் யாது" (Duraisamy pillai 1973) என்று கூறுமாறும் வேண்டுகிறார். தன் மனைவியைப் பற்றியோ, வருங்கால வாரிசைப் பற்றியோ கவலை கொள்ளாது, நட்பே தலைசிறந்ததாகப் பொத்தியார் எண்ணியுள்ளது வியக்கும் வகையில் உள்ளது.

## முடிவுரை

புறநானூறு என்பது வெறும் போர்ச் செய்திகளையும், வீரத்தையும் மட்டும் கூறும் நூலாக இல்லாமல், மனித உறவுகளில் மறைந்து கிடக்கும் உணர்வுக் கருவூலமாகத் திகழ்கிறது. மனித உறவு என்பது இல்லற உறவில் அரும்பி உயிர் உறவான பிள்ளை உறவில் விரிந்து சமூகமென்னும் நட்புறவில் மலர்கிறது. சங்க கால மக்களின் உறவுகள் எல்லாம் உணர்வின் அடிப்படையிலும், உரிமையின் அடிப்படையிலும், நேர்மை, வாய்மையின் அடிப்படையிலே உறவுகள் நிலைப்பெற்றுள்ளன. உறவுகள் நிலைபெறுவதற்கும், தவறான உறவுகளால் உண்டாகும் கேடுகளுக்கு அக்கால மக்கள் தங்கள் இன்னுயிரை அளித்து மனித உறவுகளை நிலைபெறச் செய்துள்ளனர். கணவன், மனைவியென்னும் இல்லற உறவில் தொடங்கி ஆண் பெண் பேதைமை தவிர்த்து நட்புறவில் கலந்து உறவாடி சமுதாய உறவு பாழ்பட்டு போகதுக் காப்பாற்றுவது நீதியென்னும் உணர்வாகும். இந்த நீதியே மனித உறவு தடுமாறாமல் தடம் மாறிச் செல்லாமல் நிலைத்து நிற்பதற்கு உறுதுணையாக

இருந்துள்ளன. இம்மனித உறவு மலருவதற்கு நீதியே நீர்வார்த்துக் கொண்டிருந்ததை சங்கப் பாடல் வாயிலாக நம்மால் உய்த்துணர முடிகிறது.

## References

Duraisamy Pillai, Su. (1973) Purananuru, Saiva Siddhanta Nurupathippuk Kazhagam, Chennai, India,

Gopalakrishnamacharya, (1965) Thirukkural and Parimalajagar Urai, YM Gopalakrishnamacharya Company, Tiruvallikeni, Chennai, India.

Manikam, A. (1993) Naladiyar, Manivasaka Publishing House, Chenna, India,

Saminathayar, U.V. (2000) Kurunthogai, Dr. U.V. Saminathaya Library, Besant Nag, Chennai, India.

Somasundaranar, P.V. (1974) Sivaka Chintamani, Saiva Siddhantha Nurupathippuk Kazhagam, Chennai, India.

Somasundaram, S.S. (1997) Tamil Sangam is the first university, World Tamil Cultural Society Publishing House, Chennai, India.

Tholkappiyar, (1983) Tolkappiyam - Tolkappiya Porulathikaram, (Toxicology text) Vegetarian Centennial Society, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License